Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் திங்கள்கிழமை, ஜூலை 26, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 12

# இரவு ரோந்து பணியில் விழிப்புடன் செயல்பட்டு குற்றவாளிகளை கைது செய்த காவல் ஆளிநர்கள் மற்றும் கூவம் ஆற்றில் குதித்த நபரை காப்பாற்றிய காவலரை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் நேரில் அழைத்து வெகுமதி வழங்கி பாராட்டினார்



**கண்ணகிநகர் பகுதியில் உறங்கி கொண்டிருந்த அரசு பேருந்து நடத்துநரின் பையை திருடிக் கொண்டு இருசக்கர வாகனத்தில் தப்பிய குற்றவாளியை மடக்கிப் பிடித்து, நடத்துநரின் பை மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல்**

கண்ணகிநகர் காவல் நிலைய தலைமைக் காவலர் ஸ்ரீராமதுரை மற்றும் ஊர்காவல்படை வீரர் ஹரிபிரசாத் ஆகியோர் 12.7.2021 அன்று ஜிப்சி ரோந்து வாகனத்தில் இரவு பணியிலிருந்தபோது, அதிகாலை சுமார் 03.00 மணியளவில் (13.7.2021), ஒக்கியம் துரைப்பாக்கம், ஓஎம்ஆர் சர்விஸ் சாலை, பெட்ரோல் பங்க் அருகில் சுற்றுக் காவல் மேற்கொண்டபோது, அவ்வழியே ஒரே இருசக்கர வாகனத்தில் வந்த 3 நபர்கள் காவல் வாகனத்தை பார்த்ததும், இருசக்கர வாகனத்தை திருப்பி தப்ப முயன்றபோது, காவல் குழுவினர் சத்தம் போடவே, 3 நபர்களும் இருசக்கர வாகனத்தை கீழே போட்டு ஓடினர். காவல் குழுவினர் துரத்திச் சென்று 3 நபர்களில் ஒருவரை பிடிக்க, மற்ற 2 நபர்கள் இருட்டில் ஓடி மறைந்துவிட்டனர். பிடிபட்ட நபரை விசாரணை செய்தபோது, அவரது பெயர், தனுஷ், என்பதும், தனுஷ் தப்பிச் சென்ற அவரது நண்பர்கள் குள்ளாபாய் (எ) சாகுல் அமீது மற்றும் தீனா ஆகியோருடன் சேர்ந்து, சற்று முன்பு காரபாக்கம் பேருந்து நிலையம் அருகே உறங்கி கொண்டிருந்த அரசு பேருந்து நடத்துனரின் செல்போன் மற்றும் ஆவணங்கள் இருந்த பையை திருடிக் கொண்டு இருசக்கர வாகனத்தில் வரும்போது பிடிபட்டதும் தெரியவந்தது. அதன்பேரில், பிடிபட்ட தனுஷ், கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் பேரந்து நடத்துநரின் பை ஆகியவற்றுடன் கண்ணகிநகர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். விசாரணைக்குப் பின்னர் தனுஷ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், தப்பிச் சென்ற 2 நபர்களை பிடிக்க காவல் குழுவினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

**கீழ்பாக்கம் பகுதியில் கத்தியைக் காட்டி மிரட்டி செல்போனை பறித்துக் கொண்டு இருசக்கர வாகனத்தில் தப்பிய 3 குற்றவாளிகள் கைது- 1 செல்போன் மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல்**

கீழ்பாக்கம் காவல் நிலைய முதல்நிலைக் காவலர் ரெஜின் என்பவர் 12.7.2021 அன்று இரவு ரோந்து பணியிலிருந்தபோது, நள்ளிரவு சுமார் 11.30 மணியளவில், பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் டெய்லர்ஸ் சாலை சந்திப்பு அருகே வரும்போது, கார்த்திக் என்பவர் சற்று முன்பு இவ்வழியே சென்றபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 3 நபர்கள் தன்னிடம் கத்தியைக் காட்டி மிரட்டி தனது செல்போனை பறித்துச் சென்றதாக காவலர் ரெஜினிடம் கூறினார். காவலர் ரெஜின் குற்றவாளிகளின் அடையாளங்கள் மற்றும் இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் அடையாளங்களை கேட்டறிந்து, இரவு ரோந்து பணியிலிருந்த தலைமைக் காவலர் பென் அரவிந்த் சாம் மற்றும் முதல்நிலைக் காவலர் திருக்குமரன் ஆகியோரை சம்பவ இடத்திற்கு வரவழைத்து, விசாரணை செய்து கீழ்பாக்கம் பகுதியில் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்ற 3 நபர்களை பிடித்து விசாரணை செய்தனர்.

விசாரணையில் பிடிபட்ட நபர்கள் ஆதிபகவான் (எ) தாஸ், ராஜேஷ் (எ) கோவிந்தா, திவாகர் (எ) கருப்பு, என்பதும், சற்று முன்பு மூவரும் சேர்ந்து ஒரு இருசக்கர வாகனத்தை திருடிக் கொண்டு வரும் வழியில் கீழ்பாக்கம் பகுதியில் கார்த்திக்கிடம் கத்தியைக் காட்டி மிரட்டி செல்போன் பறித்துச் சென்றதும் தெரியவந்தது. அதன்பேரில், அவர்களிடம் இருந்து கார்த்திக்கின் செல்போன் மற்றும் இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்து, பிடிபட்ட 3 குற்றவாளிகளையும் கீழ்பாக்கம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். விசாரணைக்குப் பின்னர் 3 குற்றவாளிகளும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

**நேப்பியர் பாலத்திலிருந்து கூவம் நதியில் குதித்து சேற்றில் சிக்சி தவித்த நபரை மீட்ட தமிழ்நாடு சிறப்பு காவல்படை காவலருக்கு பாராட்டு**

ஆவடி, தமிழ்நாடு சிறப்பு காவல் படை, 5வது அணியில் பணிபுரிந்து வரும் காவலர் சாமிநாதன் , 22.7.2021 அன்று மதியம் சுமார் 01.45 மணியளவில், பணி நிமித்தமாக சென்னையிலுள்ள சீருடை பணியாளர் தேர்வாணையத்தில் இருந்து இருசக்கர வாகனத்தில் நேப்பியர் பாலம் அருகே சென்று கொண்டிருந்தபோது, பொதுமக்கள் கூவம் ஆற்றை பார்த்தவாறு கூடியிருந்தனர். உடனே காவலர் சாமிநாதன் தனது இருசக்கர வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு சென்றபோது, ஒரு ஆண் நபர் நேப்பியர் பாலத்திலிருந்து கூவம் ஆற்றில் குதித்து, மார்பளவு வரையுள்ள சேற்றில் சிக்கி நகர முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார். உடனே, சாமிநாதன் அந்த சமயம் அங்கு வந்த 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் இருந்த கயிற்றை எடுத்து ஒரு முனையை பாலத்தில் கட்டி, மற்றொரு முனையில் சுருக்கு போட்டு கயிற்றை இறக்கி, பாலத்தின் பக்கவாட்டில் உள்ள கூவம் ஆற்றின் சேற்றில் சென்று கயிற்றை அந்த நபரின் உடம்பில் மாட்டி, பொதுமக்கள் உதவியுடன் கயிற்றை மேலே இழுத்து அந்த நபரை காப்பாற்றினார். சேற்றுடன் மீட்கப்பட்ட நபரை பொதுமக்கள் உதவியுடன் தண்ணீர் ஊற்றி கழுவி இளைப்பாற்றி விசாரணை செய்ததில், அவரது பெயர் கமலகண்ணன், என்பதும், மனைவியுடன் சண்டையிட்டு விரக்தியில் நேப்பியர் பாலத்திலிருந்து கூவம் ஆற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்றதும் தெரியவந்தது. பின்னர் அந்த நபரை 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இரவு பணியில் விழிப்புடன் செயல்பட்டு குற்றவாளிகளை கைது செய்த கண்ணகிநகர் காவல் நிலைய தலைமைக் காவலர் ஸ்ரீராமதுரை, ஊர்காவல்படை வீரர் ஹரிபிரசாத், கீழ்பாக்கம் காவல் நிலைய தலைமைக் காவலர் பென் அரவிந்த் சாம், முதல்நிலைக் காவலர்கள் ரெஜின், திருக்குமரன் மற்றும் தற்கொலைக்கு முயன்று கூவம் ஆற்றில் குதித்த நபரை காப்பாற்றிய தமிழ்நாடு சிறப்புக் காவல் படை வீரர் சாமிநாதன் ஆகியோரை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால், நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.

# மயிலாடும்பாறை அகழாய்வில் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால பொருட்கள் கண்டுபிடிப்பு மதியழகன் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்





கிருஷ்ணகிரி,ஜூலை 26 2021: மயிலாடும்பாறை அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால பொருட்களை மதியழகன் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்.

தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை மற்றும் கீழடி, கொந்தகை, அகரம், கங்கை கொண்ட சோழபுரம், கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மணலூர் என, 10 இடங்களில் தற்போது அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், தொகரப்பள்ளி அருகில் உள்ள மயிலாடும்பாறையில், தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், கடந்த மார்ச் மாதம் அகழாய்வு தொடங்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறை துணை இயக்குனர் சிவானந்தம் தலைமையில், மயிலாடும்பாறை அகழாய்வு இயக்குனர் சக்திவேல், தொல்லியல் அகழாய்வு அலுவலர்கள் பரந்தாமன், வெங்கடகுரு பிரசன்னா மற்றும் ஆய்வு மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த அகழாய்வை நேற்று பர்கூர் தி.மு.க., எம்.எல்.ஏ., மதியழகன் நேரில் சென்று பார்வையிட்டார். அதில், மயிலாடும்பாறை சானரப்பன் மலைப் பகுதியில் 300&க்கும் மேற்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களான கற்திட்டைகளும், கற்பதுக்கைகளும் உள்ளது. அதில் தற்போது 10&க்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வு மேற்கொண்டதில் கிடைத்த, 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலத்தைச் சேர்ந்த, 110 சென்டி மீட்டர் நீளமுள்ள வாள், பானைகள், குவளை, இரும்பு கோடாரி, கத்தி, கற்பதுக்கையில் கண்டுபிடித்துள்ள 3 கால்கள் உள்ள 5 குடுவைகள், 4 கத்திகள், ஒரு கிண்ணம் ஆகியவை காட்சி படுத்தப்பட்டிருந்தன. இவற்றை பார்வையிட்ட எம்.எல்.ஏ., அது குறித்து மயிலாடும்பாறை அகழாய்வு இயக்குனர் சக்திவேல், கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் கோவிந்தராஜ், தொல்லியல் அகழாய்வு அலுவலர் பரந்தாமன் ஆகியோரிடம் கேட்டறிந்தார். கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வுக் குழுவினர், இந்த அகழாய்வு அடுத்த மாதம் நிறைவடைய உள்ள நிலையில், இரண்டாம் கட்ட அகழாய்வு மேற்கொள்ள அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்று எம்.எல்.ஏ.,விடம், கோரிக்கை விடுத்தனர். இது குறித்து துறை அமைச்சரிடம் பேசி மேற்கொண்டு அகழாய்வுக்கு அனுமதி பெற முயற்சி செய்வதாக எம்.எல்.ஏ., வாக்குறுதி அளித்தார். அப்போது வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் குழுத் தலைவர் நாராயணமூர்த்தி, ஒருங்கிணைப்பாளர் தமிழ்செல்வன், வரலாற்று குழுவினர் ரவி, விஜயகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# கீழடி அருங்காட்சியக கட்டிட பணிகள் திட்டமிட்டபடி குறித்த காலத்திற்குள் முடிவுறும் - சுற்றுலா பண்பாடு அறநிலையத்துறை அரசு முதன்மை செயலாளர் சந்திரமோகன் பேட்டி



சிவகங்கை, ஜூலை 26, 2021 : சிவகங்கை மாவட்டம் கொந்தகை, அகரம் கீழடியில் ஏழாம் கட்ட அகழ்வராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது.

அகழ்வாராய்ச்சி பணிகளின் போது கண்டெடுக்கப்பட்ட சங்ககால தமிழர்கள் பயன்படுத்திய சுடுமண் பானை, பாசிமணி உறைகிணறு உள்ளிட்ட பொருட்களை கண்காட்சியில் பார்வைக்காக ரூ11 கோடி மதிப்பீட்டில் தொல்லியல்துறை சார்பாக அருங்காட்சியகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கொரானா பரவல் குறைந்துள்ள நிலையில் மீண்டும் அகழ்வராய்ச்சி பணிகள் மற்றும் அருங்காட்சியக பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

இப்பணிகளை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் மதுசூதனரெட்டி தலைமையில் சுற்றுலா பண்பாடு அறநிலையத்துறை அரசு முதன்மை செயலாளர் சந்திரமோகன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் திருப்புவனம் தாசில்தார் ரத்தினவேல்பாண்டியன், துணை தாசில்தார் தர்மராஜ், தொல்லியல்துறை கூடுதல் பொறுப்பு ஆணையாளர் சிவானந்தம், சிவகங்கை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பாண்டியன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் விஜயகுமார் உட்பட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

# தமிழகத்தின் நீலகிரியில் முதன்முறையாக ஆட்டோ அவசர கால ஊர்தி சேவை: பிரதமர் நரேந்திர மோடி, மத்திய இணை அமைச்சர் எல். முருகன் பாராட்டு




சென்னை, ஜூலை 26, 2021: நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ராதிகா சாஸ்திரியின் ஆட்டோ அவசர கால ஊர்தி சேவையின் முன்முயற்சியை பிரதமர் நரேந்திர மோடி தமது மனதின் குரல் நிகழ்ச்சியில் குறிப்பிட்டு அவருக்கு பாராட்டு தெரிவித்தார். "மலைப் பிரதேசங்களில் வசிக்கும் நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காக அவர்களுக்கு எளிதான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம். ராதிகா, குன்னூரில் ஓர் உணவகத்தை நடத்தி வருகிறார். ஆம்புரெக்ஸ் என்ற இந்த சேவையைத் தொடங்குவதற்காக உணவகத்தைச் சேர்ந்த தமது நண்பர்களிடம் அவர் நிதி உதவியைப் பெற்றார். நீலகிரி மலைப்பிரதேசத்தில் 6 அவசர சிகிச்சை ஊர்திகள் இயங்குவதுடன், அவசர நிலையின் போது தொலைதூரத்தில் வசிக்கும் நோயாளிகளுக்கு இவை மிகவும் உதவிகரமாக உள்ளன. தூக்குப் படுக்கை, பிராணவாயு சிலிண்டர், முதலுதவிப் பெட்டி மற்றும் இதர பொருட்கள் ஆம்புரெக்ஸில் இடம்பெற்றுள்ளன", என்று பிரதமர் கூறினார்.

பிரதமரின் இந்தப் பாராட்டுதலை அடுத்து, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் எல் முருகன், ராதிகா சாஸ்திரியை தொலைப்பேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். பிறகு அவர் வெளியிட்ட சுட்டுரைச் செய்தியில் இந்தத் தன்னலமற்ற சேவை நீலகிரியில் வசிக்கும் மக்களை ஊக்குவிப்பதுடன் அந்தப் பகுதியில் சுகாதார வசதிகளையும் மேம்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகை அச்சுறுத்தி வரும் பெருந்தொற்றுக்கு எதிராக மத்திய, மாநில அரசுகள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சூழலில் தமிழகத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆட்டோ அவசர கால ஊர்தி சேவை அந்தப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பல்வேறு அமைப்புகளின் பங்களிப்போடு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ஆட்டோ அவசரகால ஊர்தியில் பிராணவாயு உள்ளிட்ட அனைத்து மருத்துவ வசதிகளும் இடம்பெற்றுள்ளன.

மலைப் பிரதேசங்களில் அரசு அவசர சிகிச்சை ஊர்திகள் செல்ல முடியாத பகுதிகளுக்கும் சென்று சேவை செய்யும் வகையில் இந்த ஆட்டோ இயக்கப்படவுள்ளது. குறுகலான பாதைகளில் பயணித்து குக்கிராமங்களில் வசிக்கும் நோயாளிகளையும் மருத்துவமனைக்கு உடனடியாக அழைத்து வந்து சிகிச்சை அளிப்பதற்கு இந்தப் புதிய அவசர சிகிச்சை ஊர்தி பேருதவியாக இருக்கும். சமுதாயத்திற்கு தம்மால் ஏதாவது ஒரு வகையில் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதாக நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ராதிகா சாஸ்திரி கூறினார். தற்போது குன்னூர், கோத்தகிரி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் 6 ஆட்டோ அவசரகால ஊர்திகள் இயக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



# கோவில்பட்டியில் மருத்துவ முகாமை அமைச்சர் கீதாஜீவன் மற்றும் விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர்



கோவில்பட்டி, ஜூலை 26, 2021 : தூத்துக்குடி வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் உரிமை பிரிவு அணி சார்பாக கோவில்பட்டியில் நடைபெற்ற மருத்துவ முகாமை தமிழக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் கீதாஜீவன் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர். கோவில்பட்டி நகர செயலாளர் கருணாநிதி தலைமை தாங்கினார். அமலி குருப்ஸ் நிறுவனர் அ. அந்தோணிசாமி முன்னிலை வகித்தார்.

கோவில்பட்டி ஒன்றிய செயலாளர் முருகேசன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இ.ரா.மணி, மாவட்ட பிரதிநிதி ரவீந்திரன், மாரிச்சாமி, சசிக்குமார், சோலையப்பன் @ கண்ணண், நகர இலக்கிய அணி அமைப்பாளர் சேகர் நகர இளைஞர் அணி அமைப்பாளர் கா.மகேந்திரன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாரதி இரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை மாவட்ட சிறுபான்மையினர் உரிமை துறை துணை அமைப்பாளர் அமலி.பிரகாஷ் ஏற்பாடு செய்து இருந்தார்.

ஹலோ மிரர் மெட்ராஸில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

திங்கள்கிழமை,
ஜூலை 26, 2021

# விக்கிரவாண்டியில் பா ம க., நிறுவனர் டாக்டர் ராமதாஸ் பிறந்தநாள் விழா

விக்கிரவாண்டி ,ஜூலை 26.2021: விக்கிரவாண்டி அடுத்த சிந்தாமணியில் பா. ம க., நிறுவனர் டாக்டர் ராமதாஸ் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

விழுப்புரம் மத்திய மாவட்டபா ம க., சார்பில் சிந்தாமணியில் நடந்த கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் பிறந்தநாள் விழா விற்கு மாவட்ட செயலாளர் புகழேந்தி தலைமை தாங்கி கட்சி கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

பசுமை தாயகம் மாவட்ட செயலாளர் தீனவேல்,தொகுதி செயலாளர் சிவகுமார், மாவட்ட பொருளாளர் செந்தில்குமார், ஒன்றிய செயலாளர்கள் சக்திவேல், குழந்தைவேல், நகர செயலாளர் ராம்குமார், மாவட்ட துணை தலைவர் முருகன், ஒன்றிய துணை செயலாளர் வேலுமணி, கிளை நிர்வாகிகள் தங்கராசு தனஞ்ஜெயன், பாலாஜி உள்ளிட்ட பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள், வன்னியர் சங்க நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



# தூத்துக்குடியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் சுமார் 400 பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தல்

தூத்துக்குடி, ஜூலை 26, 2021 : சமூகப் பாதுகாப்புத் துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் சுமார் 400 பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு சமூக பாதுகாப்பு துறை அலுவலர் சங்கம் தென் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுக்கான பணியாளர்களின் சங்க இணைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய தமிழக அரசிடம் கோரிக்கை வைக்கும் ஆலோசனைக்கூட்டம் ஆனது தூத்துக்குடியில் அமைந்துள்ள கனி பேலஸில் வைத்து காலை 11 மணியளவில் கூட்டம் நடைபெற்றது.

மாநில பொதுச்செயலாளர் முத்துக்குமார் செய்தியாளர் சந்திப்பின்போது மத்திய அரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் அந்தந்த மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்டங்களில் குழந்தைகள் பாதுகாப்பு அலகு செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் 2012 முதல் சமூக பாதுகாப்புத்துறை மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம் 32 மாவட்டங்களில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் தலைமையில் 11 பணியாளர்கள் வீதம் 352 பேர் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தில் பணிபுரிகின்றனர் சமூக பாதுகாப்புத் துறையில் பல்வேறு பொறுப்புகளில் காலமுறை சம்பளத்தில் பணிபுரியும் பணியாளர்கள் கூடுதல் பொறுப்பாக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகின்றனர்.

கொரோனா காலத்தில் தாய் தந்தைகளை இழந்து தவிக்கும் குழந்தைகளுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட நிவாரணத்தொகை அவர்களிடம் கொண்டு போய் சேர்ப்பதில் எங்கள் பணி முக்கிய பங்கு வகிப்பதாகவும் நாங்கள் ஏற்கனவே சமூக மற்றும் மகளிர் பாதுகாப்பு துறை அமைச்சரை சந்தித்து எங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளோம் அவர்களுக்கும் தமிழ்நாடு முதல்வரிடம் இதுபற்றி எடுத்துக்கூறி நல்ல பதில் அளிப்பதாகவும் கூறியுள்ளனர். எங்களுடைய வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் குழந்தைகள் பாதுகாப்பு அலகு பணியாளர்களை நிரந்தர படுத்தி காலமுறை சம்பளம் வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுப்பதாக தனது பேட்டியின் போது தெரிவித்தார்.கூட்டத்தில் 16 மாவட்டத்தை சேர்ந்த சமூக பாதுகாப்புத் துறை சார்ந்த ஒப்பந்த பணியாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



இதனைத் தொடர்ந்து தீர்மானங்கள் வெளியிடப்பட்டது.

# எனது வீடு உள்ளிட்டவற்றில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய சோதனை, பழிவாங்கும் நடவடிக்கை - எம்.ஆர்.விஜயபாஸ்கர்

சென்னை, ஜூலை 26, 2021: முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் 55 சதவீதம் அதிகமாக சொத்துக் குவித்துள்ளார் என்று, வேட்புமனு தாக்கல் அடிப்படையில், லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சரும், கரூர் மாவட்ட அதிமுக செயலாளருமான எம்.ஆர். விஜயபாஸ்கர் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அதன்படி சென்னையில் உள்ள அவரது வீட்டிலும், கரூர் உள்ளிட்ட இடங்களிலும் இந்த சோதனை நடைபெற்றது. வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தார் என்று எழுந்த புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடைபெற்றது.

அவருக்கு நெருங்கிய தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்ட நபர்களின் இருப்பிடம் உட்பட மொத்தம் 26 இடங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் 22 ஆம் தேதி சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையில் பணம் ரூபாய் 25,56,000/- மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்கள், காப்பீட்டு நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள், நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனை தொடர்பான ஆவணங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

"எனது வீடு உள்ளிட்டவற்றில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய சோதனை, பழிவாங்கும் நடவடிக்கையின் முதல்கட்டம். எனக்கு கரூரிலும் சென்னையிலும் சொந்த வீடு கிடையாது. கைப்பற்றப்பட்ட பணத்திற்கு உரிய கணக்கு உள்ளது. ஆவணங்களைச் சமர்பிப்போம் என எம்.ஆர்.விஜயபாஸ்கர் நேற்று தெரிவித்திருந்தார்.



இந்தநிலையில் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது சொத்துக்குவிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. எம்.ஆர். விஜயபாஸ்கர் 55 சதவீதம் அதிகமாக சொத்து சேர்த்ததாக, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 2016, 2021 ஆம் ஆண்டு தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்தபோது சொத்து அதிகமாக சேர்த்தது தெரிய வந்துள்ளது.

அதேபோல், எம்.ஆர்.விஜயபாஸ்கரின் மனைவி விஜயலட்சுமி, சகோதரர் சேகர் ஆகியோர் மீதும் சொத்துக் குவிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு தேர்தல் வேட்புமனுவில் 2.51 கோடி ரூபாய் சொத்து இருந்த நிலையில், 2021இல் 8.62 கோடி ரூபாய் என 55 சதவீதமாக சொத்து உயர்ந்துள்ளதாக, லஞ்ச ஒழிப்புத் துறையினர் அவர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

# கொரோனா நிவாரண நிதி, 14 வகை மளிகைப் பொருட்களை பெறாதவர்கள் ஜூலை 31 ந்தேதி வரை பெற்றுக் கொள்ளலாம் - மு க ஸ்டாலின்

சென்னை, ஜூலை 26, 2021: கொரோனா நிவாரண நிதி, 14 வகை மளிகைப் பொருட்களை பெறாதவர்கள் ஜூலை 31 ந்தேதி வரை பெற்றுக் கொள்ளலாம் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதால், மக்கள் பலர் வாழ்வாதாரத்தை இழந்து தவித்தனர். திமுக ஆட்சிக்கு வந்தால் கொரோனா நிவாரண நிதி ரூ.4 ஆயிரம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும் என மு.க ஸ்டாலின் வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன்படி, ஆட்சிக்கு வந்த முதல் நாளே கொரோனோ நிவாரண நிதியை வழங்குவதற்கான கோப்பில் கையெழுத்திட்டார். மே மாதம் 2000 ரூபாய், ஜூன் மாதம் 2000 ரூபாய் என இரண்டு தவணையாக வழங்க உத்தரவு பிறப்பித்தார். அதன்படியே, மக்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு மே, ஜூன் மாதங்களில் தலா ரூ.2 ஆயிரம் வழங்கப்பட்டது. மேலும் 14 வகை மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பும் வழங்கப்பட்டது.



ரேஷன் கடைகளில் 14 வகை மளிகை பொருட்கள் மற்றும் நிதியுதவியை பெறுவதில் சிலருக்கு சிரமம் ஏற்பட்டது. கொரோனா பரவல் மற்றும் மருத்துவமனையில் சிகிச்சை போன்ற காரணத்தால் சில பயனாளிகள் அதனை பெற முடியவில்லை. அந்தத் தொகையை பெறாதவர்களுக்கான கால அவகாசம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது. ஜூலை 31-ஆம் தேதிக்குள் தொகையை பெற்றுக்கொள்ள தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது.

மேலும் மே மாதம் 10 ஆம் தேதி முதல் புதிதாக ரேஷன் கார்டுக்கு விண்ணப்பித்த சுமார் 3 லட்சம் பயனாளிகளுக்கு, குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைதாரர்கள் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் இருந்து பொருட்களை தங்கு தடையின்றி பெறலாம் என்றும் தெரிவித்துள்ளது.

# திண்டுக்கல் தொப்பம்பட்டி ஊராட்சி மரிச்சிலம்பு ஊராட்சிக்கு உட்பட்ட கிராமத்தில் 4.90 கோடியில் பூமிபூஜை மற்றும் அடிக்கல் நாட்டு விழா உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது

திண்டுக்கல், ஜூலை 26 2021: திண்டுக்கல் மேற்கு மாவட்டம் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மரிச்சிலம்பு ஊராட்சியில் பூலாம்பட்டி - தீத்தாகவுண்டன்வலசு சாலையை இதர மாவட்ட சாலையாக தரம் உயர்த்தி தீத்தாகவுண்டன் வலசில் பூமிபூஜை பணி ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலையாக தரம் உயர்த்துதல் திட்டத்தின் கீழ் சுமார் 290 லட்சம் மதிப்பீட்டிலும், பூலாம்பட்டி ஆதிதிராவிடர் காலனியில் சமுதாயக்கூடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல் பணிக்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் சுமார் 30 லட்சம் மதிப்பீட்டிலும், அமரபூண்டி -பூலாம்பட்டி சாலையில் இதர சாலையாக தரம் உயர்த்தி பூலாம்பட்டியில் பூமிபூஜை பணி ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலையாக தரம் உயர்த்துதல் திட்டத்தின் கீழ் சுமார் 170 இலட்சம் மதிப்பீட்டிலும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் தலைமையில் பூமி பூஜை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தொப்பம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், தொப்பம்பட்டி ஒன்றியக்குழு துணைத்தலைவர் பி.சி.தங்கம், தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் கே.தங்கராஜ், தொப்பம்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ் , மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி , அரசு ஒப்பந்ததாரர் கொத்தையம் வேலுச்சாமி, மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்தராஜ், பழனி, கோட்டாட்சியர் ஆனந்தி, வட்டாட்சியர் வடிவேல்முருகன், மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலர் சாலி தளபதி, பூலாம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணியன், துணைத்தலைவர் கயல்விழி பாலசுப்பிரமணியன், பூலாம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தலைவர், துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் திமுக கழக தொண்டர்கள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.






திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியத்துக்குடபட்ட கோரிக்கடவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் சுமார் 7 லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் திறப்பு விழா உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது. அருகில் தொப்பம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், தொப்பம்பட்டி ஒன்றிய துணைத்தலைவர் பி.சி.தங்கம், தொப்பம்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன், கோரிக்கடவு கிளைச் செயலாளர் மாரிமுத்து ஆகியோர் உள்ளனர்.

# கிருஷ்ணகிரி அடுத்த தொட்டமெட்டரை கிராமத்தில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியை டாக்டர் செல்லகுமார் எம்.பி. துவக்கி வைத்தார்



கிருஷ்ணகிரி, ஜீலை 26 2021: கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை அருகே உள்ள தொட்டமெட்டரை கிராமத்தில் நடைபெறும் மாபெறும் கிரிக்கெட் போட்டியை கிருஷ்ணகிரி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் துவக்கி வைத்தார்,இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட விவசாய காங்கிரஸ் தலைவர் ஹரிஷ் பாபு அவர்கள் முன்னிலை வகித்தார்,இதில் பாண்டியன்,தேவராஜ்,ஹரிஷ்,அம்சப்பா,முனிராஜ் மற்றும் கோபால்,ராமமூர்த்தி,ரமேஷ்,சுந்தர்,தேன்கனிக்கோட்டை ரகுமான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# கொரோனாவின் இறந்தவரின் சடலத்தை கேட்டு நள்ளிரவில் ஒரு டாக்டரை மற்றொரு டாக்டர் தாக்கியதால் பரபரப்பு

விக்கிரவாண்டி, ஜூலை 26 2021: விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரியில் கொரோனாவில் இறந்தவரின் சடலத்தை கேட்டு நள்ளிரவில் பணியிலிருந்த டாக்டர்களை மற்றொரு டாக்டர் தாக்கி ரகளை . மருத்துவ மனையில் பரபரப்பு . போலீசார் விசாரணை துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க கலெக்டர் உத்திரவிட்டார் .

விழுப்புரம் அரசு மருத்தவக் கல்லூரி மருத்துவ மனை, இருதய பிரிவில் கடலூர் மாவட்டம் மங்கலம் பேட்டையை சேர்ந்த டாக்டர் கதிர்வேல்,40 என்பவர் பணிபுரிந்து வருகிறார். இவரது பக்கத்து ஊரான விருத்தாசலத்தை சேர்ந்த காசிநாதன் மகன் செம்பால்,75 என்பவர் மருத்துவ மனையில் கொரோனா பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி கடந்த 23 ம் தேதி இறந்தார். அவரது சடலத்தை சவக்கிடங்கில் வைத்திருந்தனர் .

நேற்று நள்ளிரவு அதிகாலை 1.30 மணியளவில் , பனையபுரத்தை சேர்ந்த ராஜபாண்டியன், 39 : விழுப்புரம் காகுப்பத்தை சேர்ந்த சூர்யா,29 மற்றும் 10 அடங்கிய கும்பலுடன் மருத்துவ மனைக்கு சென்று சவக்கிடங்கில் இருந்த சடலத்தை எடுத்துச் செல்ல டாக்டர் கதிர்வேல் முயற்சித்துள்ளார். அப்போது அவசர சிகிச்சை பிரிவில் பணியிலிருந்த பொது மருத்துவ பிரிவு சந்தானம், 40 : தடுத்ததாக கூறப்படுகிறது. அவரிடம் கதிர்வேல் தகராறில் ஈடுபட்டு ரகளை செய்தார். உடன் பணியிலிருந்த பொதுமருத்துவ பிரிவு டாக்டர் திலீப் ராஜன் ,25 : தகராறில் ஈடுபட்ட கதிர்வேலை தடுத்தார் .

இதனால் ஆத்திரமடைந்த கதிர்வேல் , திலீப் ராஜனை தாக்கியதாக கூறப்படுகிறது. இது பற்றி முண்டியம்பாக்கம் மருத்துவ மனை புறக்காவல் நிலைய போலீசாருக்கு அவசர சிகிச்சை பிரிவு மருத்துவ அலுவலர் அப்துல் அக்கீம் புகார் செய்தார் . அதன் பேரில் புறக்காவல் நிலைய போலீசார் தகராறில் ஈடுபட்ட டாக்டரையும், உடன் வந்தவர்களை யும் போலீசார் பிடித்து விக்கிரவாண்டி போலீசில் ஒப்படைத்தனர் . மருத்துவ மனையில் பணிபுரியும் டாக்டரே மற்றொரு டாக்டரை தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நேற்று மருத்துவ மனையில் ஆய்வு செய்த கலெக்டர் மோகனிடம் நிருபர்கள் தகவல் தெரிவித்ததின் துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கல்லூரி டீனிடம் கலெக்டர் உத்திரவிட்டார் .

# அரசு மருத்துவக்கல்லூரியில் கலெக்டர் மோகன் திடீர் ஆய்வு



விக்கிரவாண்டி, ஜூலை 26.2021: விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் கலெக்டர் மோகன் திடீர் ஆய்வு செய்து வார்டுகளை பார்வையிட்டார் .

விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கலெக்டர் மோகன் நேற்று காலை திடீர் ஆய்வு செய்தார் . ஆய்வின் போது மருத்துவ மனையின் பின்புறம் தேங்கியிருந்த 150மெட்ரிக் டன் மருத்துவ கழிவுகள் அகற்றும் பணியினை பார்வையிட்டு , கழிவுகள் அகற்றிய பகுதிகளில் இயற்கை வளத்துடன் அடர்காடு மரக்கன்றுகளுடன் பூங்கா அமைக்க அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார். மேலும் பிளாஸ்டிக் குப்பைகளை பிரித்தெடுத்து,பிளாஸ்டிகை அரைக்க தனி குடோன் அமைக்க கூறினார். மேலும் மருத்துவ கழிவுகள் கொட்டியிருந்த பகுதியில் ஆழமாக பள்ளம் எடுத்து மண் வளம் கெடாத வகையில் இயற்கை உரங்களை கொட்ட உத்திரவிட்டார்.

மருத்துவ மனை புறநோயாளிகள் பிரிவுகளை பார்வையிட்டு பணியிலிருந்த டாக்டர்களிடம் சிகிச்சை முறை குறித்து கேட்டறிந்து நோயாளிகளிடம் சிகிச்சை தரம் குறித்து கேட்டார் . மருத்துவ மனையில் தற்பொழுது கட்டப்பட்டுவரும் ஆக்ஸிஜன் பிளாண்ட் பணியை துரிதபடுத்தி முடிக்கவும் . மருத்துவ மனைக்கு தண்ணீர் பற்றாக்குறையை போக்க தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் புதியதாக குடிநீர் கிணறு அமைத்து தருவதாக உறுதியளித்தார் .

பயிற்சி கலெக்டர் ரூபினா, கல்லூரி டீன் குந்தவி தேவி, ஊராட்சிகள் உதவி இயக்குனர் ஜோதி, பி.டி.ஓ., முபாரக் அலி பேக் , ஆர்.எம்.ஓ., சாந்தி, வி.ஏ.ஓ., பால்ராஜ் ,ஊராட்சி செயலாளர் சுரேஷ்குமார் மற்றும் துறை சார்ந்த டாக்டர்கள் , அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர் .

விழுப்புரம் அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனையில் கலெக்டர் மோகன் , மருத்துவ கழிவுகள் அகற்றும்பணியினை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார் .ஊராட்சிகள் உதவி இயக்குனர் ஜோதி.

விழுப்புரம் அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனையில் கலெக்டர் மோகன் , மருத்துவ கழிவுகள் அகற்றிய இடத்தில் கொட்டப்படவுள்ள இயற்கை உரத்தை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார் .

# வங்க கடலில் சூறை காற்று மீன்பிடிக்க செல்ல மீன்வளத்துறை தடை துறைமுகங்களில் விசைப்படகுகள் நிறுத்தம்



ராமேசுவரம், ஜூலை.26 2021: வங்க கடலி; சூறை காற்று வீசுவதால் ராமநாதபுரம் மாவட்டத்தில் வசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல மீ ; னவளத்துறையினர் சனிக்கிழமை தடை விதித்தனர். இதனால் 1800 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் அந்தந்த துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ளது.

வங்க கடலில் சூறை காற்று வீசி வருவதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என வானிமை மையம் அறிவுறுத்தி உள்ளது. இந்த நிலையில் . ராமேசுவரம்,பாம்பன்,மண்டபம்,கீழக்கரை,ஏர்வாடி,தொண்டி,சோழியகுடி உள்ளிட்ட பகுதியில் விசைப்படகுகள் சனிக்கிழமை மீன்பிடிக்க செல்ல மீன்வளத்துறையினர் தடை வித்தனர். இதனால் அந்தந்த பகுதியில் உள்ள துறைமுகத்தில் 1800 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நிறுத்தபட்டுள்ளது. இதனால் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாமல் முடங்கி உள்ளனர்.

# ராமேசுவரத்தில் ஆட்டோவிற்கு கட்டணத்தை குறைத்து கொடுத்தவருக்கு பீர் பாட்டிலில் அடித்து மண்டை உடைப்பு

ராமேசுவரம், ஜூலை.26 2021: ராமேசுவரத்தில் ஆட்டோவிற்கு கட்டணம் குறைத்து கொடுத்த பூ வியாபாரியை பீர் பாட்டிலை வைத்து மண்டை உடைத்த டிரைவரை போலீசார் சனிக்கிழமை கைது செய்தனர். ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் மார்க்கெட் தெருவை சேர்ந்த ராமதாஸ் இவரது மகன் சௌந்தர்ராஜன்(32) ராமநாதபுரத்தில் இருந்து பூ வாங்கிக்கொண்டு ராமேசுவரம் வந்துள்ளர். பேருந்து நிலையம் வந்தவுடன் அட்டோ ஸ்டாண்டில் இருந்த ஆட்டோவை அழைத்துள்ளனர். ஒண்டிவீரன் நகரை சேர்ந்த சங்கம்(28) ஆட்டோவில் பூ பார்சலை எடுத்துக்கொண்டு மார்கெட் சென்று விட்டு சங்கரிடம் ரூ 100 கொடுத்துள்ளர். ஆனால் அவர் ரூ 150 கேட்டுள்ளர். ஆனால் கொடுக்காததால் வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது. ஆட்டோ டிரைவர் சங்கர் ஆட்டோவில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து பூ வியாபாரி மண்டையை உடைத்துள்ளனர்.

இதில் படுகாயமடைந்த சௌந்தர்ராஜன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளா சதீஸ்குமார் புகார் தெரிவித்துள்ளர். இந்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செயது ஆட்டோ டிரைவர் சங்கரை சனிக்கிழமை கைது செய்தனர். ராமேசுவரத்தில் உள்ள ஆட்டோக்களுக்கு செல்ல வட்டார போக்குவரத்து அலுவலர் ஆய்வு செய்து கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. மேலும் ஆட்டோ ஓட்டுநர்கள் முறைபடுத்த காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.



மதுரை: மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஊர்ச்சேரி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டு நினைவு மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அணிஷ் சேகர் தலைமையில் நடைபெற்றது. சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் , ஊர்ச்செரி ஊராட்சி மன்ற தலைவர் செந்தில் குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.

# கரும்பு வயலுக்கு ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பு ராஜ் ஸ்ரீ சுகர்ஸ் அறிமுகம்

விக்கிரவாண்டி,ஜூலை 26 2021: முண்டியம்பாக்கம் ராஜ் ஸ்ரீ சர்க்கரை ஆலையில் கரும்பு வயலுக்கு ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் செயல் விளக்க நிகழ்ச்சி நடந்தது.

முண்டியம்பாக்கம் ராஜ் ஸ்ரீ சர்க்கரை ஆலை கிடைப்பதில்லை. பொதுவாக மருந்து தெளிக்க ஒரு ஏக்கருக்கு 150 முதல் 200 லிட்டர் வரை தண்ணீர் தேவைப்படுகிறது.ட்ரோன் மூலம் மருந்து தெளிக்க 10 லிட்டர் மட்டுமே தண்ணீர் தேவைப்படும். மேலும் ஒரு ஏக்கர் மருந்து தெளிக்க ஏழு



நிறுவனத்தில் கரும்புஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையின் சார்பில்நடந்த கரும்பு வயலுக்கு ட்ரோன் மூலம் நுண்ணூட்ட உரம் தெளிக்கும் செயல் விளக்கம் நிகழ்ச்சியில் கரும்பு அபிவிருத்தி துறை அதிகாரி அவினாசிலிங்கம் விவசாயிகளிடத்தில் கூறியதாவது:

கரும்பு ஒரு வருட பயிர் என்பதால் 4 மாத காலத்தில் 5 அடிக்கு மேல் வளர்ந்து விடுகிறது. வயலுக்குள் சென்று வேலையாட்கள் பூச்சி மருந்து தெளிப்பது , நுண்ணூட்ட உரம் தெளிப்பது சிரமமாக இருந்தது.ஒரே சீராகவும் அனைத்து பகுதிகளுக்கும் நிமிடம் மட்டுமே போதுமானது இதனால் செலவும் குறைகிறது சீரான அளவில் வயல் முழுவதும் மருந்து தெளிப்பதால் வயல்களில் பூச்சி கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் பயிர்கள் நன்கு வளர்ந்து மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது .வரும் காலங்களில் ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் சேவையை வழங்க ஆலை நிர்வாகம் முயற்சி செய்கிறது.இவ்வாறு அவர் கூறினார் .

